## அலகு 5

## கற்பித்தல் என்னும் முறைப்படுத்தப்பட்ட உயர்தொழில்

- **அலகு - 5**
- **பொருள் :**
- **கற்பித்தல் என்பது அறிவு , செயற்திறன்கள் மனப்பான்மைகள் விழுமங்கள் ஆகியவற்றை ஒருவர் கற்று அறிய உதவும் விதமாக குறிப்பிட்ட குழுவினரால் மேற்கொள்ளப்படும் தொழில் சார் செயல்பாடுகள் ஆகும்**

- முன்னுரை
- கற்பித்தல் தன்மை மற்றும் இயல்புகள் ஆகியவை கற்பித்தல் என்னும் முறைப்படுத்தப்பட்ட உயர்தொழில்
- தொழில் முறை ஆசிரியரின் சிறப்பியல்புகள் மற்றும் மனப்பான்மை, மேம்பாட்டு திட்டங்கள் குறித்து மாணவ ஆசிரியரின் கருத்து ஆகியன விவாதிக்கப்பட உள்ளது.
- வரையறை
- கிளார்க் - "கற்பித்தல் என்பது நடத்தை மாற்றங்களை தோற்றுவிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட ஆசிரியரது அனைத்து செயல்களும் ஆகும்.
- ஸ்மித் கூற்றுப்படி கற்பித்தலும் கற்றலும் வெவ்வேறானவை. கற்றலை தூண்டுவதற்காக திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளின் தொகுப்பு கற்பித்தல் ஆகும்.
- 

  கற்பித்தலின் சிறப்பியல்புகள்:
- கற்பித்தலின் சிறப்பியல்புகள்

  1. இது முக்கியமாக ஒரு அறிவு சார்ந்த நடத்தையை உள்ளடக்கியது

2. இது அறிவியல் கூறுகளில் இருந்து பொருள்களை ஈர்க்கிறது
3. இது தன்னாட்சி அதிகாரம் பெற்றது
4. இது கல்வி ரீதியான பரஸ்பர நுட்பத்தை பெற்றிடுகிறது
5. இது சமூக சேவையை அடிப்படையாக கொண்டது.

கற்பித்தலின் தன்மை அல்லது இயல்புகள் :

- <u>கற்பித்தலின் தன்மை அல்லது இயல்புகள்</u>

1. பரந்த அறிவு ஆற்றல்
2. தனிப்பட்ட கல்வி தேவைகள்
3. கல்வி இலக்குகள் பள்ளியில் உரையாட செய்தல்
4. கற்பித்தல் என்பது மிகவும் சிக்கலான சமூக செயல்பாடு ஆகும்.

<u>கற்பித்தல் என்பது ஒரு திறத்தொழில் :</u>

- கற்பித்தல் என்பது ஒரு திறத்தொழில்

1. முறையான பயிற்சி என்ற செயல்பாடு
2. சிறப்புத்தன்மை உடைய அறிவு தொகுப்பு
3. சான்றிதழ் வழங்க தகுதி உடையவராக தனிப்பட்ட செயல்பாடு
4. செயற்பாட்டிற்கான அறிவு செய்முறை அறம் சார் தகு நிலைகள்.

- <u>கற்பித்தல் முறையியல்</u>
- திறத்தொழிலாக ஆசிரிய பணிக்கு முறையான பயிற்சி என்ற செயல்பாட்டை நிகழ்த்தும் சிறப்புத்தன்மை உடைய அறிவு தொகுப்பாக திகழ்வது கற்பித்தல் முறையியல் ஆகும்.

- ஆசிரியர் தொழில் உன்னதமானது

- ஆசிரியர் என்பவர் சாதாரண மனிதன் அல்ல. அவரது அரவணைப்பும் ஆக்கத்தையும் அழிவையும் தரவல்லது.என்பார் சாணக்கியர். இக்கூற்று ஆசிரியர் மற்றும் கற்பித்தலின் நிலையை பறை சாற்றுவதாகும்.
- ஒரு தொழில்முறை ஆசிரியரின் பண்புகள்
- கற்பித்தல் ஆற்றல் கொண்டு விளங்குதல்
- நேர்மறை எண்ணம் கொண்டு விளங்குதல்
- ஆசிரியர் கற்பித்தலில் அர்ப்பணிப்பு உணர்வு கொண்டு திகழ்தல்
- முன் மாதிரியாக திகழ்தல்
- நம்பக தன்மையுடன் காணப்படுதல்
- மாணவர்களுக்கு சரியான பாதையை காட்டுகிறது.நாட்டின் எதிர்கால மேம்பட்ட வளர்ச்சிக்கு தேவையான மனித வளத்தை வழங்குகிறது.
- எதிர்கால தலைமுறையினரை வார்த்திடுகிறது.
- பணியில் இது உன்னதமானதாக கருதப்படுவதற்கு காரணம் அனைத்து திறத்தொழில்களும் ஒரு ஆசிரியரால் வழங்கப்பட்ட கல்வியின் விளைவேயாகும்.
- கற்பதில் ஆற்றல் கொண்டு விளங்குதல்
- பாடப்பொருள் அறிவு
- தகவல் தொடர்பு திறன்கள்
- பாடப்பொருள் கற்பிக்கும் முறைகள்
- வகுப்பறை மேலாண்மை
- பல்வேறு கற்பித்தல் உத்திகளை பயன்படுத்துதல்
- ஆசிரியர் நேர்மறை எண்ணம் கொண்டு விளங்குதல்
- ஆசிரியர் கற்பித்தல் அர்ப்பணிப்பு கொண்டு திகழ்தல்
- திறமையான தொடர்பாடல்
- முன் மாதிரியாக திகழ்தல்

- ஆசிரியர் தன்னம்பிக்கை உடன் காணப்படுதல்
- அறிவினை திறம்பட சேர்ப்பிப்பவராய் திகழ்தல்
- வினைபயன்மிக்க கற்பித்தலின் இயல்புகள்
- 1. பாட க்கருத்துக்களை கோர்வையாக வரிசைப்படுத்தி வழங்கிடல்
- 2. மாணவர்களை ஊக்குவித்தல்
- 3. கற்பித்தலின் பகுத்தறிதல் மற்றும் தொகுத்தறிதல் முறையை பயன்படுத்துதல்
- 4. மேம்பட்ட தகவல் தொடர்பு திறன் கொண்டு செயல்படல்
- 5. வகுப்பறை கற்பித்தலில் பல்வேறு கற்பித்தல் உத்திகளை பயன்படுத்திடல்
- 6. சரியான முறையில் கரும்பலகையில் எழுதுதல்
- 7. மாணவர் கற்றலை மதிப்பிடுதல்

வகுப்பறை கற்பித்தலில் ஒரே மாதிரியான கற்பித்தல் தூண்டல்களை அளித்தல்:

- 1. கற்பித்தலின் போது ஆசிரியரின் அங்க அசைவுகள்
- 2. சைகைகள்
- 3. குரலில் ஏற்ற இறக்கங்கள் அல்லது பேச்சு தன்மையில் மாற்றம்
- 4. இடைவினை யாறிடும் முறையில் மாற்றம்
- 5. இடைவெளி கொடுத்து பேசுதல்
- 6. மையப்படுத்தி பேசுதல்
- 7. பேசுதல் மற்றும் காட்சி படுத்துதல்

- கற்பித்தலில் ஆசிரியர் பின்பற்றுபவை
- தான் கற்பிக்கும் பாடத்தில் மிகுந்த புலமை பெற்று இருத்தல்

- கற்றல் பங்கேற்பு இணைந்து செயல்படல் கூட்டுறவுடன் செயல்படல் மற்றும் துடிப்புடன் செயல்படல்
- மாணவர்களிடம் கற்றல் வேட்கையை ஏற்படுத்திட
- ஆசிரியர் ஆக்கத்திறன் கொண்டு பாடப்பொருளை புதுப்புது வழிகளில்கற்பிக்க முற்படுத்தல்
- <u>சுய கற்றல் அனுபவங்களை பெற செய்திடும் வகுப்பறை முறைகள்</u>
- 1. ஆசிரியரின் பாட அறிவு, உற்சாகம் மற்றும் பொறுப்புணர்ச்சி
- 2. வகுப்பறை கற்பித்தல் செயல்பாடுகள்
- 3. வகுப்பறை இடைவினைகள்
- 4. மதிப்பீடு முறைகள்
- 5. பின்னுட்டம் அளிக்கும் முறைகள்

<u>கல்வித்திட்டத்தின் உள்ளடக்கம்:</u>

- 1. உலகளாவிய உண்மை நிலையை ஆராய்தல்
- 2. நீடித்த வளர்ச்சி என்பதை புரிந்து கொள்ளல்
- 3. கலைத்திட்டத்தில் எதிர்கால தொலை நோக்கு பார்வை
- 4. நீடித்த வளர்ச்சி கொண்ட எதிர்காலத்திற்காக கல்வியை மாற்றி அமைத்தல்
- 5. சவால்களை ஏற்றல்
- 6. நீடித்த வளர்ச்சி குறித்த கருத்துக்களை புகுத்துதல்
- 7. குடியுரிமை கல்வி
- 8. உடல்நல கல்வி
- 9. நகர்வோர் கல்வி
- 10. மக்கள் தொகையும் நாட்டு முன்னேற்றம்
- 11. நீடித்த சுற்றுலா
- 12. நீடித்த விவசாயம்

- 13. நீடித்த சமுதாய நடைமுறைகள்
- <u>பழைய கல்வி கொள்கை 1968</u>
- பழைய கல்வி கொள்கை பின்னர் அனைவருக்கும் சமுதாயத்தில் மாற்றம் ஏற்பட்டது
- 1. அரசாங்கத்தைப்போல் தனியார் துறையும் கல்வி துறையில் முக்கிய பங்காற்ற வேண்டும்
- 2. கல்வி கட்டணம் நீக்கப்பட வேண்டும்
- 3. ஆசிரியர்களுக்கு இடையே உள்ள வேறுபாடுகளை நீக்குதல்
- நம் நாட்டின் உற்பத்தியை பெருக்குதல்
- சமூகம் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டினை உண்டாக்குதல்
- நம் நாட்டின் ஒவ்வொரு துறையையும் நவீன மயமாக்குதல்
- மக்கள் மனங்களில் சமூகம், ஒழுக்கம் மற்றும் ஆன்மீக எண்ணங்களை விதைத்தல்.
- கல்வியை உற்பத்தியுடன் இணைத்தல்
- தொழில் அனுபவம்
- தேசிய ஒருமைப்பாடு பெற செய்தல்
- நவீன மயமாக்குதலை துரித படுத்துதல்
- சமூக ஆன்மிக அறநெறி மதிப்புகளை போற்றுதல்.
- <u>புதிய கல்விக்கொள்கை</u>
- <u>முக்கிய அம்சங்கள்</u>
- நமது நாட்டில் உள்ள கல்வியியல் வல்லுனர்கள் தங்கள்து பார்வைகள் கருத்துக்கள் நம்பிக்கைகள் ஆசைகள் போன்ற தலைப்புகளில் விவாதம் ஊடகம் வழியாகவும் மைய அரசுடன் நேரடி தொடர்பில் நடைபெற்றது.அவ்விவாதம் விளைவாக தேசிய கல்வி கொள்கை 1986 உருவாக்கப்பட்டது.

<u>முக்கிய அம்சங்கள்:</u>

- 1. தேசிய அளவிலான கல்வி திட்டம்
- 2.சமத்துவத்திற்கான கல்வி
- 3. அனைவருக்கும் ஆரம்ப கல்வி
- 4. பொதுவான கல்வி அமைப்பு
- 5. தேசிய அளவிலான கலைத்திட்ட அமைப்பு

தேசிய அளவிலான கல்வி திட்டம்:

- தேசிய அளவிலான கல்வி திட்டம்
- தரமான கல்வியை அனைவருக்கும் பெறும் படி சமவாய்ப்பு அளிப்பது
- பொதுவான கல்வி அமைப்பு
- தேசிய அளவிலான கலைத்திட்ட அமைப்பு
- கல்வியின் பல்வேறு நிலைகளில் குறைந்த பட்ச கற்றல் வழங்குவது

புதிய கல்வி கொள்கையின் முக்கிய கூறுகள்:

- கல்வி என்பது நிகழ்காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் உள்ள சிறந்த முதலீடு
- தேசிய அளவிலான கல்வி திட்டம்
- சமத்துவத்திற்கான கல்வி
- அனைவருக்கும் ஆரம்ப கல்வி
- மதிப்புணர்வு கல்வி
- மதிப்பீட்டு முறை
- தேர்வு முறை சீர் திருத்தங்கள்
- சமுதாய ஈடுபாடு
- 1986 ல் புதிய தேசிய கல்வி கொள்கைப்படி 21ம் நூறாண்டு தொடங்குவதற்கு முன்பே பதினான்கு வயது வரை அனைத்து குழந்தைகளுக்கும் தரமான கட்டாய கல்வியை இலவசமாக கொடுக்க வேண்டும் என்று உறுதியளிக்க பட்டது

- தொடக்க நிலை பள்ளிகளில் படித்தல் எழுதுதல் கணிதம் செய்தல் ஆகியவை கல்வியின் அடிப்படை கூறுகள் என கற்றுக்கொடுக்கின்றனர்
- அரசு நிறுவனங்கள் கல்வியின் எல்லா துறைகளிலும் ஆராய்ச்சி ஏற்படுத்தி அவற்றின் வளர்ச்சிக்கு உதுவுகின்றன.
- அறிவு ,திறமை, தேவையான மனப்பான்மை மற்றும் நன்னெறி பண்புகளை வளர்ப்பதன் மூலம் குழந்தைகளிடம் தேவையான தன்னம்பிக்கையை வளர்க்க முடியும். இதன் நான்கு முக்கிய அம்சங்கள்
- 1. தொடர்ந்து அறிவை பெருக்கி கொள்ளும் திறனை பெறுதல்
- 2. அறிந்தவற்றை செயல்படுத்தும் திறனை பெறுதல்
- 3.பிறரோடு சேர்ந்து வாழும் திறனை பெறுதல்
- 4. தன் திறமைகளை அறிந்து அவற்றிக்கு ஏற்ப வாழும் திறனை பெறுதல்

**ஆசிரியரின் பண்புகள்:-**

i.) மாணவர்களுக்கு சிறந்ததொரு பள்ளிக்கல்வியையும், வாழ்க்கைக் கல்வியையும் வழங்கவேண்டுமாயின் குழந்தையின் சுயவிருப்பு வெறுப்புகளை புரிந்து கொள்ளும் பண்பு பெற்றருக்க வேண்டும்.

ii.) மாணவர்களின் ஆர்வத்தை தூண்டி, அவர்களின் அறிவுத்தாக்கத்தையும் தீர்க்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

iii.) தொடந்துக் கல்விநிலையில், உறவு நிலையில் ஆசிரியர்கள் பெற்றோரின் மறு உருவமாக மாணவர்களிடம் பிரதிபளிக்க வேண்டும்.

iv.) கற்றலில்-கற்பித்தல் பணியில் ஒரு ஆசிரியர் கற்பிக்கும் ஆற்றல் மட்டும் பெற்றிருந்தால் போதாது, மாணவர்களுக்கு விளக்கி சொல்லக் கூடிய செயல்திறனும் முக்கியமாக அமையப்பெற்றவராக இருக்க வேண்டும்.

v.) மாணவர்களின் மனநிலையைப் புரிந்துகொண்டு, வகுப்பறையில் கற்றல் மற்றும் பிற நடவடிக்கைகளை உற்றுநோக்கும் திறன் பெற்றிருக்க வேண்டும்.

vi.) பாடத்திட்டம் மட்டுமின்றி கதைகள், தத்துவம், வரலாறு, அறிவியல், சமூகம் போன்றவற்றில் மாணவர்க்கு தேவையான அனுபவ அறிவினைப் பெற்றிருத்தல் இன்றியமையாதது.

**ஆசிரியருக்கான ஆக்கச்செயல்கள்:**

i.) மாணவர்களின் விளையாட்டு நடனம், நாடகம், பாடல், இசை போன்ற பல்வேறு திறன்களை பெற்று விளங்கிட இத்தகைய ஆக்கத்திறனை ஆசிரியர் முதலில் பெற்று ஆக்கச்செயலில் மாணவர்களுக்கு உதாரணமாக விளங்கிட வேண்டும்.

ii.) பல்வேறு பயிற்சிகளை பெறுவதன் மூலம் ஆக்கச்செயல்கள் பலவற்றை ஆசிரியரால் பெற்று அதனை மாணவர்களுக்கும் வழங்கும் ஆக்கத்திறன் கொண்டவராக இருக்க வேண்டும்.

iii.) ஆசிரியர் தான் கற்றவற்றை மாணவர்களிடத்தில் செயல்வடிவம் பெறச் செய்வது இன்றியமையாதது. பயிற்சி காலத்தில் பள்ளிக்குச் சென்று பெற்ற பயிற்சியினை செயல்வடிவத்திற்கு கொண்டுவரும் ஆக்கச் செயலில் ஈடுபட வேண்டும்.

iv.) மாணவர்களின் செயல்களை உற்றுநோக்கி, அவர்களின் பல்வேறு வளர்ச்சியை கண்காணித்து வளர்ச்சியானது வயதுக்கு ஏற்ப உள்ளதா எனவும், குறைபாடுகள் இருப்பின் காரணம் கண்டறிந்து களையும் திறன் பெற்றிருக்க வேண்டும்.

**ஆசிரியப் பணியின் கற்பித்தல் தகுதிகள்:-**

ஆசிரியர் அன்பு, கருணை, சமத்துவ எண்ணம் போன்ற பண்புகள் மட்டும் அல்லாமல் தனிப்பட்ட குணநலன்களையும், சில திறன்களும் கற்பித்தல் செயலில் வெற்றிபெறுவதற்கு பெற்றிருக்க வேண்டும்.

i.) கற்பிக்கும் பாடத்தின் பொருள் உணர்ந்தும், பாடத்திட்டமிடும் திறனும், மிகவும் அவசியமான தகுதியாகும்.

ii.) கற்பித்தல் செயலில் ஈடுபட முன்கூட்டியே திட்டமிடும் ஆற்றல், கொண்டவராக இருக்க வேண்டும். கற்றல் கற்பித்தல் கருவிகளை தயார் செய்யும் திறன் கண்டறிந்து தனிப்பட்ட கவனத்துடன் மீண்டும் கற்பித்தலை நினைவுகூர்ந்து சிறந்த போதனையாளராக விளங்கும் தகுதிபெற்றிருக்க வேண்டும்.

iii.) மாணவர் பாடம் தொடர்பான கற்றல் செயல்பாடுகளில் அமைந்துள்ள முன்னேற்றத்தை அளவிடும் ஆராய்ச்சியாளராக திகழ்ந்து பின்தங்கியுள்ள மாணவரைப் படிப்பில் முன்னேற்றம் அடைய வழிகாட்ட வேண்டும்.

iv.) மாணவர்களிடம் ஒரு சமூகமான தொடர்பினை தொடர்ந்து ஏற்படுத்திக் கொண்டு ஏகாதிபத்திய போக்கை கையாளுவதை முற்றிலும் தவிர்க்க வேண்டும்.

**ஆசிரியப்பணியின் வகுப்பறை நிகழ்வுகளின் முக்கியத் தேவைகள்:-**

**திட்டமிடுதல்:-**

எந்த பாடத்தை ஒரு ஆசிரியர் கையாளுகின்றாரோ அந்த பாடத்தில் போதிய அறிவு பெற்றிருக்க வேண்டும். மாணவரை ஒழுங்குப்படுத்துவதில் போதிய திறமைபெற்று இருந்தால் மாணவர்களை நம்பிக்கையோடு எதிர்நோக்க முடியும். மாணவர்கள் மற்றும் அவர்களின் குணநலன்கள், கல்விக்குறிக்கோள்கள், ஊடக அறிவு பெற்று அவற்றின் துணைகொண்டு வகுப்பறை நிகழ்வுகளை திட்டமிட வேண்டும். மாணவர்களின் தேவைகளுக்கு ஏற்ப கற்பித்தலை மேற்கொள்ளும் திறனையும், திட்டமிடலும் ஆசிரியரிடம் இருக்க வேண்டும்.

**கட்டுப்பாட்டு திறன்:-**

மாணவர்களுக்கு கற்பித்தலை தெளிவாகவும், சுருக்கமாகவும் அதே சமயம் விளக்கமாகவும், வகுப்பறையில் கட்டுப்பாட்டுடன் கவனிக்கும் சூழலை ஏற்படுத்தும் நிர்வாகத்திறன் கொண்டவராக தன்னை நிலைநிறுத்திக்கொள்ள வேண்டும். கரும்பலகையில் வரைதல், கேள்வியை எழுப்புதல், தெளிவாக விளக்குதல் போன்ற தொடர்புகளை ஏற்படுத்தி கொண்டு வகுப்பறையை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் நிர்வாகத்திறன் படைத்தவராக விளங்க வேண்டும்.

**தொடர்பு கொள்ளுதல்:-**

ஒரு ஆசிரியர் நேர்த்தியாகவும், தெளிவாகவும், நேர்மையாகவும் மாணவர்களிடம் தொடர்புகொள்ளும் திறன் அவசியம் ஆகும். மாணவர்களின் திறன் கண்டறியவும், அவர்களின் சுய சிந்தனை செயல்பாட்டோடு அணுகும் திறன், தன்னம்பிக்கையை வளர்த்தல் மற்றும் ஏற்புடைய வகையில் எல்லா வகுப்பறை நிகழ்வுகளை ஏற்படுத்திக் கொடுத்து தன்னை மாணவரிடத்தில் இணக்கமான தொடர்பில் வைத்துக்கொள்ள வேண்டும்.

**மதிப்பீடுதல்:-**

மாணவர்களை மதிப்பிடவும், அவர்களின் கற்றல் சார்ந்த வெளிப்பாடுகளை நிர்ணயம் செய்யும் திறன் பெற்றிருக்க வேண்டும். மாணவர்களின் செயல்பாடு, பண்புகள், குடும்பம், வரலாறு போன்றவற்றை கண்டறிந்து அவர்களின் நடத்தை குணங்களை மதிப்பிட வேண்டும். மதிப்பீடல் செயலானது மாணவர்களுக்கு சரியான கற்றல் உத்திகளையும், கற்பித்தல் முறைகளையும் பயன்படுத்தவும், கற்பித்த கருவிகளை வடிவமைக்கவும் உதவிபுரியும்.

**ஆசிரியர் பயிலரங்குகள்:-**

ஆசிரியர்கள் பணியில் சேர்ந்த பிறகும், ஆசிரியர் பயிற்சியின் போதும் ஆசிரியப் பணியில் பயிலரங்குகள் முக்கிய அங்கம் வகிக்கின்றன. பயிலரங்கத்தில் பயிற்சி பெறுவதன் மூலம் ஆசிரியர்கள் தனக்கும் மாணவர்களுக்கும் தேவையான கற்றல் கற்பித்தல் அறிவையும், பாடதிட்டத்தின் உத்திகளையும், செயல்பாட்டுடன் கூடிய கற்றல்-கற்பித்தல் அறிவையும் பெறுகின்றனர். பயிலரங்கத்தில் கற்பித்தலில் ஏற்படும் சிக்கல்கள், இடர்பாடுகள் தீர்ப்பதற்கும், பலவிதமான வலுவூட்டும் செயல்முறை நிகழ்வுகளை வகுப்பறையில் பயன்படுத்த முன்னோட்ட பயிற்சியும் பயிலரங்குகள் மூலம் ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகின்றன.

**ஆசிரியரின் கற்றல்-கற்பித்தல் உத்திகள்:-**

பல்வேறு திறன்களின் செயல்பாடுகளை ஒருங்கமைத்து தந்து மாணவர்களின் கற்றலை வெற்றியடையச் செய்யவும், அறிவுத்திறனை வளர்க்கவும்,

i.) செயல்வழிக் கற்றல் - கற்பித்தல் முறைகள், கருவிகள்,
ii.) கதை கூறுல்
iii.) விழுமக் கல்வி
iv.) சிக்கல்களை தீர்த்தல்
v.) குழுகற்றல்
vi.) வகுப்பறைக்கு வெளியேயும் கற்கச் செய்தல்

பிரச்சனைகளை சுலபமாக தீர்த்தல் போன்ற உத்திகளை கையாளுதல் வேண்டும்.

**முடிவுரை**

அனைத்து மாணவர்களும் பல்வேறு சமுதாய பலத்தையும், பாரம்பரியம், பழக்கவழக்கத்தையும் அடிப்படையாக கொண்டு பள்ளிக்கு பயில வருகின்றனர் என்பதை ஆசிரியர் புரிந்து கொள்ள வேண்டும். அதற்கேற்ற வகையில் ஒவ்வொரு மாணவரின் திறமையும், தேவையும், கற்றலும் மாறுபடும் என்பதை உணர்ந்து கற்றல்-கற்பித்தல் உத்திகளை மாணவரின் திறன் மற்றும் தேவைக்கேற்ப பயன்படுத்தி ஒவ்வொரு மாணவரையும் கற்றலிலும், பள்ளியில் மட்டும் வெற்றியடைய செய்யாமல் அவர்கள் தங்கள் வாழ்க்கையிலும், சமுதாயத்திலும் வெற்றிபெற்றவர்களாக மாற்றும் கடமையும் பொறுப்புணர்வும், கொண்ட பணி ஆசிரியப்பணி என்பதை உணர்ந்து ஒவ்வொரு ஆசிரியரும் பணி செய்திட வேண்டும்.

## கற்பித்தல் தன்மை மற்றும் இயல்புகள்:

- கற்பித்தல் தன்மை மற்றும் இயல்புகள்
- ஸ்மித் என்பாரது கருத்துப்படி "கற்பித்தல் கற்றல் இரண்டும் வெவ்வேறானவை.
- கற்றலை தூண்டுவதற்காக மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட செயல்பாடுகளின் தொகுப்பே கற்பித்தலாகும்".
- கற்பித்தல் திறன்கள்:-

கற்பித்தல் என்பது மிகவும் சிக்கலான சமூக செயல்பாடு

கற்பித்தல் என்பது ஒரு கலை மற்றும் அறிவியல்

கற்பித்தல் என்பது முறைப்படுத்தப்பட்ட ஒரு உயர் ரக தொழில்

கற்பித்தல் என்பது ஆசிரியரிடம் இருந்து எழும் வெளியீடு

கற்பித்தல் என்பது ஆசிரியர் வகுப்பறை தொகுப்பு

கற்பித்தல் என்பது குறிக்கோள் அடைய மாணவரிடம் நேரிடையாக வினை புரிதல்

**வினை பயன்மிக்க கற்பித்தல்:-**

- வினை பயன்மிக்க கற்பித்தல் மற்றும் அதன் இயல்புகள்
- இலக்கு சார்பான நடத்தை மாற்றத்தை ஏற்படுத்துதல் மூலம் ஆசிரியரின் கற்பித்தல் பொருத்தப்பாடு மற்றும் தரம் கொண்டு விளக்கினால் அது வினை பயன்மிக்க கற்பித்தல் எனப்படும்.

**வினை பயன்மிக்க கற்பித்தல் மற்றும் அதன் இயல்புகள்:-**

- **பாடகருத்துக்களை கோர்வையாக வரிசைப்படுத்தி வழங்கிடல்**
- **பாடகருத்துக்களை எளிமைப்படுத்தி தெளிவுபடுத்தி விளக்குதல்**
- **கற்பித்தலில் பகுத்தறிதல் மற்றும் தொகுத்தறிதல் முறையை பயன்படுத்துதல்**
- **வகுப்பறை கற்பித்தலில் பல்வேறு கற்பித்தல் உத்திகளை மேற்கொள்ளுதல்**
- **வகுப்பறை கற்பித்தலில் பொருத்தமான கற்பித்தல் சாதனங்களை பயன்படுத்துதல்**
- **மாணவர்களை ஊக்குவித்தல்**
- **சிறந்த வகுப்பறை மேலாண்மை.**

**பண்புகள்:**

- **பாடப்பொருள் பற்றிய ஆழமான அறிவு ஆசிரியருக்கு இல்லாமல் இருத்தல்**
- **குறிக்கோள்கள் இன்றி கற்பித்தல்**
- **கற்பித்தல் சாதனங்களை பயன்படுத்தாதிருத்தல்**
- **பாடகருத்துக்களை தொடர்பன்றி வழங்குதல்**

- ஒருவழிதகவல் தொடர்பு

கற்பித்தலில் காரணிகள்:

- ஆசிரியரின் பாட அறிவு
- உற்சாகத்துடன் செயல்படல்
- தகுந்த பின்னுட்டம் அளித்தல் மூலம் வகுப்பறையில் சிறந்த கற்றல் செயல்களை உருவாக்கிடல்
- அனுபவங்கள் வாயிலாக கற்றலை மதித்து போற்றுதல்.

கற்பித்தலில் ஆசிரியர் பின்பற்றப்பட வேண்டியவை:

- தான் கற்பிக்கும் பாடத்தில் ஆழமான அறிவு ஆசிரியர் பெற்று இருத்தல்
- ஆசிரியர் மாணவரோடு நெருங்கிய தொடர்பு கொண்டு இடைவினை ஆற்றுதல்
- மாணவரிடம் கற்றல் வேட்கையை ஏற்படுத்தி ஆக்கத்திறன் கொண்டு பாடப்பொருளை புதுப்புது வழிகளில் கற்பிக்க முற்படுதல்
- தனது கற்பித்தலில் மேம்படுத்தும் வழிமுறைகளை கண்டறிதல்.
- நிலையான எதிர்காலத்திற்கான கற்பித்தலும் கற்றலும்
- சுற்றுசூழல் சீர்கேட்டினால் எதிர்கால மனித வாழ்வு இருண்ட நிலைக்கு தள்ளப்படுதல்
- நீடித்த நிலையான வளர்ச்சி

நீடித்த நிலையான வளர்ச்சி:

- எதிர்கால சந்ததியினர் தங்கள் தேவைகளை பூர்த்தி செய்யும் திறமைகளுக்கு ஊறு விளைவிக்காத வகையில் தங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கான முன்னேற்ற நடவடிக்கை முலமாக ஈடுபடுதலாகும்.

யுனெசுகோ வெளியிட்ட நிலையான எதிர்காலத்திற்கான கற்பித்தல் கற்றல் திட்டம்:

- எதிர்காலத்தின் வாழ்வியல் முறைகள்
- அறிவு மற்றும் விழுமங்கள், நடத்தைகள்
- வசிக்கும் பூமி மற்றும் சிக்கலான பிரச்சினைகள், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் மற்றும் கல்வியாளர்கள்
- சுற்றுசூழல் சீரழிவு மற்றும் மக்கள் தொகை பெருக்கம்
- மனித உரிமைகளுக்கு இடையேயான முரண்பாடுகள்.